**சுருக்கம்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் - 2005-2006 ஆம் ஆண்டு பகுதி -II திட்டம் - கல்வி நிறுவனங்களில் இயங்கும் விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ மாணவியருக்கான மாதாந்திர உண்டி, உறையுள் கட்டணங்களை உயர்த்தி வழங்க - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(சிந 2)த்துறை**

அரசாணை நிலை எண்,47.
நாள்.16.05.2005.

பார்த்திப ஆண்டு வைகாசி 2,

படிக்கப்பட்டது.

1. அரசாணை நிலை எண். 59, பி,மி.பி.,(ம) சி.நலத்துறை நாள். 6.6.2000
2. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநரின் கடித எண். டி1/1275/2005 நாள். 1.3.2005

*******

ஆணை

பார்வை இரண்டில் படிக்கப்பட்டுள்ள கடிதத்தில் கல்வி நிறுவனங்களுடன் இணைந்த விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியருக்கு மாதாந்திர உண்டி உறையுள் தொகை 1978 முதல் பின்வருமாறு வழங்கப்பட்டு வருகிறது என்று பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

| வரிசை எண். | பாடப்பிரிவின் பெயர் | ஒரு மாதத்திற்கான உண்டி, உறையுள் கட்டணம் (ரூபாய்.) | |
|---|---|---|---|
| | | சென்னை நகரம் | மாவட்டம் |
| 1. | கலை, அறிவியல் மற்றும் சட்டம் | 60 | 50 |
| 2. | தொழிற்கல்வி | 60 | 55 |
| 3. | ஐ.டி.ஐ. பாடப்பிரிவுகள் | 50 | 45 |

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கல்வி நிறுவனங்களுடன் இணைந்த விடுதிகளில் தங்கிப் பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ மாணவியருக்கு மாதாந்திர உண்டி உறையுள் கட்டணங்கள் 2000-2001 ஆம் ஆண்டு முதல் உயர்த்தி வழங்குவதற்கு ஆணையிடப்பட்டது என்று பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார். தற்போதுள்ள விலைவாசியை ஒப்பிடுகையில் பிற்படுத்தப்பட்டோர் மாணவ மாணவியருக்கு வழங்கப்படும் உண்டி உறையுள் கட்டணங்கள் மிகவும் குறைவு என்றும் இக்கட்டணங்களை உயர்த்தினால் கல்வி நிறுவனங்களில் இணைந்துள்ள விடுதிகளில் அதிக மாணவ மாணவியர் சேருவதற்கு வாய்ப்புள்ளது என்றும், பிற்படுத்தப்பட்டோர் துறையின் கீழ் இயங்கி வரும் விடுதிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை குறைய வாய்ப்புள்ளது என்றும், புதிய விடுதிகள் திறப்பதற்கு வரும் கோரிக்கைகளும் குறையும் என்று பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார் . எனவே கல்வி நிறுவனங்களுடன் இணைந்த விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியருக்கு வழங்கப்படும் உண்டி உறையுள் கட்டணத்தை நகரம் மற்றும் கிராமப்புற பகுதிகளுக்கு மாதம் ஒன்றுக்கு முறையே ரூபாய் 75 மற்றும் ரூ60 என, ரூபாய் 32.27 இலட்சம் செலவினத்தில் உயர்த்தி வழங்குவதற்கு 2005-2006ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் செயற்குறிப்பினை பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் அரசுக்கு சமர்ப்பித்துள்ளார்.

3. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநரின் செயற்குறிப்பினை. பரிசீலனைக்குப்பின் அரசு ஏற்றுக் கொள்கிறது. அதன்படி, கல்வி நிறுவனங்களுடன் இணைந்த விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியருக்கு தற்போது வழங்கப்படும் மாதாந்திர உண்டி உறையுள் கட்டணங்கள் பின்வருமாறு உயர்த்தி வழங்கப்படுவதற்கு ஆணையிடப்படுகிறது:-

| வ.எண். | பாடத்திட்டத்தின் பெயர் | தற்போதைய கட்டணம் (ரூபாய்) | | உயர்த்தப்பட்ட கட்டணம் (ரூபாய்) | |
|---|---|---|---|---|---|
| | | நகரம் | கிராமப்புறம் | நகரம் | கிராமப்புறம் |
| 1. | தொழிற்கல்வி | 60 | 55 | 75 | 60 |
| 2. | கலை, அறிவியல் மற்றும் சட்டம் | 60 | 50 | 75 | 60 |
| 3. | தொழிற்பயிற்சி படிப்பு (ஐ.டி.ஐ) | 50 | 45 | 75 | 60 |

இத்திட்டத்திற்கு ரூபாய் 32.27 இலட்சம் கூடுதல் செலவினமாக

நிதி ஒப்பளிப்பு மற்றும் ஒப்புதல் வழங்கி ஆணையிடப்படுகிறது. இந்த கூடுதல் செலவினம் குறித்த விவரம் இந்த ஆணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

3. மேலே பத்தி 2 ல் அனுமதிக்கப்பட்டுள்ள செலவினத்தை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கலாம் :-

2225 - ஆதி திராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 03- பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 277 - கல்வி - பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் - II மாநிலத் திட்டம் - JF மெட்ரிக்குலேசனுக்கு மேற்பட்ட வகுப்புகளில் பயிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் - படிப்புதவித் தொகை - 12- படிப்புதவித்தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் - 09- ஏனையவை.

(த.தொ.கு. 2225-03-277-JF-1294).

4. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 293/DS VNP-2005. நாள். 13.4.2005-ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அ. நாகராஜன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

பி(ம) சி.நல இயக்குநர், சென்னை -5
மி.பி.(ம) சீ.மரபினர் நல இயக்குநர், (பொறுப்பு) சென்னை -5
மாநிலக் கணக்காயர், சென்னை -18/பெயரில்.
மாநிலக் கணக்காயர், சென்னை -6/-பெயரில்.
மாநிலக் கணக்காயர்(தணிக்கை) சென்னை -6
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்,(கிழக்கு), சென்னை -5

நகல்

நிதி (SW) BG /B4I (11) சென்னை -9
உதிரி/நகல்.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.